# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**B.A.** DEGREE EXAMINATION – **TAMIL**

SECOND SEMESTER – **APRIL 2023**

**UTL 2501 – IDAIKKALA ILAKKIAM**

Date: 29-04-2023 Dept. No. [ ] Max. : 100 Marks

Time: 01:00 PM - 04:00 PM

**பகுதி – அ ( *10 x 2 = 20* மதிப்பெண்கள் )**

***விடையொன்றுக்கு 20 சொற்களில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.***

01. 'வித்தகர் திரி கூடத்தில்
 வெளிவந்த வசந்தவல்லி' - இடம் சுட்டுக.
02. கருணாகர தொண்டைமான் யார்? அவனது வீரச் செய்திகளைக் கூறும் நூல் எது?
03. பாற்கடலில் பிறந்த சங்கு போன்ற தூய்மையானவள் யார்? அவள் பெற்றெடுத்த இறைமைந்தன் யார்?
04. மீனாட்சியம்மையிடம் சேர்ந்தால் எவற்றைப் பெறலாம்?
05. தரிசனமாதாவின் சிறப்பு யாது?
06. 'ஒல்காப் பெருந்தமிழ் மூன்று ஓதியருள் மாமுனியும்
 தொல்காப்பியம் மொழிந்த தொல்முனியும்'- இவ்வடிகளில் குறிப்பிடப்படுவோர் யாவர்?
07. பெருமாள் திருமொழி கூறும் செல்வம் குறித்தச் செய்தி யாது?
08. 'மெய்யுணர்தல்'- விளக்கம் தருக.
09. யாருக்கு நல்ல நெறி இல்லை என்று தாயுமானவர் கூறுகின்றார்?
10. கதவின் சுழியாணி கழலக் காரணமாக முத்தொள்ளாயிரம் எதனைக் குறிக்கின்றது?

**பகுதி – ஆ ( *5 x 7 = 35* மதிப்பெண்கள் )**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப் பக்க அளவில் விடையளிக்க.**

11. வசந்தவல்லியின் தோற்றப்பொலிவினை விளக்குக.
12. கலிங்கத்துபரணி- காடு பாடியது பகுதியில் கூறப்படும் செய்திகளை எழுதுக.
13. இறைமைந்தனின் தோள் சிறப்பினைத் திருக்காவலூர்க் கலம்பகம் வழி நின்று விளக்குக.
14. அம்புலியை மீனாட்சி அம்மையுடன் விளையாட வருமாறு அழைக்கும் திறம் குறித்து எழுதுக.
15. தேவமாதாவுக்கு வழங்கப்படும் பல்வேறு பெயர்களையும் அதற்கான காரணங்களையும் எழுதுக.
16. வித்துவக்கோடு என்னும் தலத்தின் சிறப்புகளை விரித்துரைக்க.
17. தாயுமானவர் இறைவனை எவ்வாறெல்லாம் அழைக்கின்றார்?

**பகுதி – இ ( *3 x 15 = 45* மதிப்பெண்கள் )**

***மூன்று பக்க அளவில் விடையளிக்க.***

18. வசந்தவல்லி பந்தாடும் திறத்தினைத் திருக்குற்றாலக் குறவஞ்சி வழி விளக்குக.

 **( அல்லது )**

 மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் வழியாக அறியப்படும் மீனாட்சியம்மையின் சிறப்புகளை விரித்து எழுதுக.

19. திருக்காவலூர்க் கலம்பகம் எடுத்துரைக்கும் அடைக்கல அன்னையின் பெருமைகளைத் தொகுத்துரைக்க.

 **( அல்லது )**

 திருச்சதகம், 'அறிவுறுத்தல்' பகுதி வெளிப்படுத்தும் சமயச் செய்திகள் குறித்துக் கட்டுரை எழுதுக

20. தாயுமானவர் இறைவனைப் போற்றும் விதத்தைப் பராபரக்கண்ணி வாயிலாக வெளிப்படுத்துக.

 **( அல்லது )**

 மூவேந்தர் பெருமை குறித்து முத்தொள்ளாயிரம் கூறுவனவற்றைக் கட்டுரைக்க.

&&&&&&&&&&